# திருப்பூர் மாநகராட்சி

**2018 மே மாதம் 14–ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

## 264 முதல் 270 வரை

**22–05–2018–ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

## 271 முதல் 283 வரை

## திருப்பூர் மாநகராட்சி

**2018ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு மா. அசோகன் எம்.எஸ்.சி.,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

*****

**264)** திருப்பூர் மாநகராட்சி நான்கு மண்டலம் மற்றும் மைய அலுவலகங்களுக்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள் ஈரோடு மாவட்ட எழுதுபொருட்கள் கூட்டுறவு அச்சகத்தில் அச்சிட்டு பெறுவதற்கு 2018–19ஆம் ஆண்டுக்கு உத்தேச செலவினம் ரூ.25.00 இலட்சம் ஆகும். மாமன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப் பொருள் வரைவு ஒப்புதலுக்கு.

**அலுவலகக் குறிப்பு :**

(அ) அனுமதிக்கலாம்.

(ஆ) 2018–19ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டதன்படி படிவங்கள் பதிவேடுகள் கூட்டுறவு அச்சகத்தில் அச்சிட்டு பெற அனுமதிக்கலாம்.

( அ.1 / 1743 / 2018 )

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

–––––

**265)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம்–2–க்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் ‘‘A” பிரிவுக்கு உட்பட்டு உள்ளதால் “A” பிரிவுக்குரிய வசதிகள் ஏதும் பேருந்து நிலையத்தில் செய்யப்படவில்லை என்றும் அனைத்து வசதிகளும் செய்தால் தான் பேருந்து நிலையத்திற்கு அங்கீகாரம் வழங்கப்படும் என 09.06.2012ஆம் தேதிய வட்டார போக்குவரத்து அலுவலர் திருப்பூர் (வ) அவர்களின் குறிப்பாணை எண். 27760/அ.3/12ன் மூலம் தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட குறிப்பாணையில் கூறப்பட்ட அனைத்து குறைபாடுகளும் நிவர்த்தி செய்து 12.06.2012ம் தேதிய இவ்வலுவலக கடிதம் மூலம் அங்கீகாரம் வழங்குமாறு வட்டார போக்குவரத்து அலுவலருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மேலும் வட்டார போக்குவரத்து அலுவலக வாகன ஆய்வர் 28.08.2012ல் பேருந்து நிலையத்தினை ஆய்வு செய்து பேருந்து நிலைய காலியிட மைதானத்தில் உள்ள மின் கம்பங்களில் மின்விளக்குகளை ஒளிர செய்ய வேண்டும் என்றும், உயர்மின்கோபுரத்தில் 4 விளக்குகள் எரிவதில்லை என்றும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்வசதி செய்து தர வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி மேற்படி பணிகளை செய்ய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு டெண்டர் வரவழைக்கப்பட்டு மாமன்ற அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணிகள் முழுவதும் செய்து முடித்து 22.02.2013ல் முடிக்கப்பட்டு அங்கீகாரம் வழங்க வட்டார போக்குவரத்து அலுவலருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மீண்டும் வாகன ஆய்வர் அவர்கள் பேருந்து நிலையத்தினை ஆய்வு செய்து, பயணிகள் அமரப் போடப்பட்டுள்ள நாற்காலிகள் போதாது என்றும் கூடுதலாக போடப்பட வேண்டும் என்றும் போக்குவரத்து கழகங்களின் அலுவலர்களால் வழங்கப்படும் பயணிகள் சீட்டு பெறுவதற்கு ஸ்டீல் தடுப்பு அமைக்குமாறும் பேருந்து கால அட்டவணை வைக்கப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது. மேற்காணும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து மீண்டும் 11.06.2013ல் பேருந்து நிலையத்திற்கு வழங்க கோரப்பட்டது.

**<u>265–ன் தொடர்ச்சி</u>**

வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் ஆகியோரரால் கூட்டு ஆய்வு செய்யப்படடது.

வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் 02.01.2014ல் பேருந்து நிலையத்தினை ஆய்வு செய்து பயணிகளுக்கான கழிப்பிட வசதி மிகவும் சுகாதாரக் குறைவாக உள்ளது ன்றும் பராமரிப்பு செய்யப்பட வேண்டும் என்றும், பேருந்து நிலையத்தில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றப்பட வேண்டும் என்றும் பேருந்துகள் புறப்படும் நேரம் மற்றும் உத்தேச வருகை நேரம் ஆகிய விவரங்கள் ஒலிபரப்பு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட அனைத்து குறைபாடுகளும் சரி செய்யப்பட்டு 29.01.2014ல் பேருந்து நிலையத்திற்கு அங்கீகாரம் வழங்க வட்டார போக்குவரத்து அலுவலருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. 27.06.2014ம் தேதிய வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் நே.மு.க.ந.க.எண். 6451/2013/அ.4ல் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறையில் பிப்ரவரி 2014ல் ஆய்வு செய்த போது கழிப்பறைக்கு ரூ.5/–ம், குளிப்பதற்கு ரூ.10/–ம் வசூல் செய்வது கண்டறியப்பட்டதாகவும், அதன்படி குத்தகைதாரர்க்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை இரத்து செய்து புதியதாக ஏலமிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடங்களை சரிவர பராமரிப்பு செய்யாத காரணத்தால் ஏலநிபந்னைகளின்படி கழிப்பிடத்தில் குத்தகைதாரர்க்கு ரூ.100/–அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது. மாநகராட்சி அலுவலர்களால் தொடர்ந்து ஆய்வு செய்தபோது தொடர்ந்து சரியாக கட்டணம் பெறப்படாததால் மேலும் இருமுறை அபராதம் விதிக்கப்பட்டது. தொடர்ந்து இதேபோல கூடுதலாக கட்டணங்கள் பெறப்பட்டதால் குத்தகை உரிமத்தினை இரத்து செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டதில் மாமன்றம் ஒப்புதல் வழங்கவில்லை.

இதனைத் தொடர்ந்து கழிப்பிடங்களில் சுகாதாரமான முறையில் பராமரிப்பு செய்து வருவதை கண்காணிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் வட்டார போக்குவரத்து அலுவலரால் பேருந்து நிலையத்தினை ஆய்வு செய்து பேருந்துகள் நிற்கும் இடத்தில் மேற்கூரை அமைக்குமாறும், பேருந்து நிலையத்திற்குள் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றுமாறு தெரிவிக்கப்பட்டது.

வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பேருந்து நிலையத்தில் உள்ள குறைபாடுகளை ஒரே முறையில் சுட்டிக்காட்டாமல், பலமுறை ஆய்வு நடத்தி ஒவ்வொரு ஆய்வின் போதும் புதுப்புது குறைபாடுகள் தெரிவித்து நிவர்த்தி செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது. வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் தெரிவிக்கப்பட குறைபாடுகளை நிவர்த்தி செய்து மீண்டும் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனாலேயே பேருந்து நிலையத்திற்கு அங்கீகாரம் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டது. மேலும் பேருந்து நிலையத்திற்கு அங்கீகாரம் வழங்காத காரணத்தால் டிரான்ஸ்போர்ட் நிறுவனம் நுழைவுக் கட்டணம் வழங்கமறுத்துவிட்டனர். எனவே பேருந்து நிலைய நுழைவுக் கட்டணம் பொது ஏலம் விடப்படவில்லை. வட்டார போக்குவரத்து ஆய்வாளர் குறிப்பின்படி புதிய பேருந்து நிலையத்திற்கு செலவினம் ரூ. 79.50 இலட்சம் செலவு செய்து அனைத்துப் பணிகளும் சரிசெய்யப்பட்டது. பேருந்து நிலையம் அங்கீகாரம் பெறும் கோப்பு நீண்டு கொண்டே சென்றதால் துறை மூலம் வசூல் செய்யவோ, குத்தகைக்கு விடவோ நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை. மேலும் கேட்பு எழுப்பப்படவில்லை.

**265–ன் தொடர்ச்சி**

மேலும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திருப்பூர் அவர்களின் செயல்முறைகள் எண். Roc.No.036313/A.3-/2015, Date 12-01-2016-ன்படி அங்கீகாரம் வழங்கப்பட்டது. அங்கீகாரம் புதுப்பிக்கப்பட்டு **20.05.2015** முதல் **19.05.2018** வரை புதிய பேருந்து நிலையத்திற்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டது.

மேலும் ஒரு வருடம் கழித்து அங்கீகாரம் வழங்கப்பட்ட மாமன்றத் தீர்மானம் எண்.**1190** நாள் **26–02–2014**–ன்படி **2013–14**ம் ஆண்டிற்கான பொது ஏலம் மூலம் திரு பி.விஸ்வநாதன் என்பவருக்கு மூன்று ஆண்டு காலத்திற்கு குத்தகை உரிமம் புதுப்பிக்கப்பட்டது. மேலும் இரண்டு வருடங்கள் கழித்து அங்கீகாரம் வழங்கப்பட்டதால் குத்தகைதாரருக்கு மூன்றாம் ஆண்டில் **07–02–2016** முதல் **31–03–2016** வரையுள்ள காலத்திற்கு குத்தகை உரிமம் ஒப்படைக்கப்பட்டு குத்தகைத் தொகை ரூ.**1,43,225/–** மற்றும் சேவை வரி ரூ.**20,065/–** வசூல் செய்யப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து பொது ஏலம் நடத்தப்பட்டு புதிய பேருந்து நிலைய குத்தகை தொகை முறையாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிகழ்வானது மாநகராட்சியால் ஏற்படவில்லை. முழுக்க முழுக்க போக்குவரத்து துறையினரால் ஏற்பட்டது என்பதை மாமன்றத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

– – – – –

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அங்கீகரிக்கப்பட்டது.

–––––

**266)** அரசு ஆணை எண்.**609**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் **16–12–2013**ல் திருப்பூர் மாநகர பகுதிகளில் உள்ள முக்கிய சாலை சந்திப்புகளில் நடை மேம்பாலங்கள் பின்வருமாறு கட்ட அனுமதி வழங்கப்பட்டது.

| வ. எண். | இடம் | மதிப்பீட்டுத்தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | மாநகராட்சி சாலை – மங்கலம் சாலை சந்திப்பு | 89.00 |
| 2 | டவுன்ஹால் ரயில்வே ஸ்டேசன் சாலை | 70.00 |
| 3 | குமார் நகர் – அவினாசி ரோடு சந்திப்பு | 58.00 |
| 4 | ரயில்வே ஸ்டேசன் ரோடு – புஸ்பா தியேட்டர் ரோடு சந்திப்பு | 43.00 |
| 5 | தாராபுரம் ரோடு – காங்கேயம் ரோடு சந்திப்பு | 100.00 |
| 6 | நல்லூர் ராக்கியாபாளையம் பிரிவு – காங்கேயம் ரோடு சந்திப்பு | 43.00 |
| | **மொத்தம்** | **403.00** |

மேற்குறிப்பிட்ட பணிகளில் **3**வது பணியான குமார் நகர் – அவினாசி ரோடு சந்திப்பு மற்றும் **5**வது பணியான தாராபுரம் ரோடு – காங்கேயம் ரோடு சந்திப்பு பணிகள் தொடர்பான தேசிய நெடுஞ்சாலை துறையினருடன் கூட்டு ஆய்வின் போது இந்த இரண்டு இடங்களில் தற்போது சாலை அகலப்படுத்தி அமைப்பதால் இடம் பற்றாக்குறை காரணமாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் நடை மேம்பாலங்கள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவித்து உள்ளனர். ஆகவே இந்த பணிகளை கைவிட்டு, அதற்காக பெறப்பட்ட தொகையை ஒப்புவிக்க வேண்டியுள்ளது.

அவினாசி – அவினாசிபாளையம் சாலை தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டதால் இரண்டாவது பணியான டவுன்ஹால்–ரயில்வேஸ்டேசன் ரோடு சந்திப்பு மற்றும் **4**வது பணியான ரயில்வே ஸ்டேசன் ரோடு – புஷ்பா தியேட்டர் ரோடு சந்திப்பு பணிகளுக்கு தேசிய நெடுஞ்சாலைத்

**266–ன் தொடர்ச்சி**

துறையினரிடம் அனுமதி பெற வேண்டியுள்ளது. இவ்விடங்கள் கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை அவர்களின் நேரடி ஆய்வின் போது வழங்கப்பட்ட வழிகாட்டுதல்படி, உரிய வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் தயார் செய்து தேசிய நெடுஞ்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அனுமதி விரைவில் கிடைக்கவுள்ளது.

ஆறாவது பணியான இராக்கியாபாளையம் ரோடு (நல்லூர்) – காங்கேயம் ரோடு, இடம் சம்பந்தமாக அருகில் உள்ள கடைக்காரர்கள் பெற்ற கோர்ட் தடையினை நீக்கம் செய்ய எதிர் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் கோர்ட்டை அணுகியவர்கள் மற்றும் அருகில் உள்ள பொது மக்களுடன் நேராய்வு செய்து பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு காண கோர்ட் அறிவுறுத்தியவாறு நேர் ஆய்வு செய்தும், பேச்சு வார்த்தை நடத்தப்பட்டும் எவ்வித சாதகமான முடிவும் எட்டப்படாத நிலையில் இந்த பணியை அருகில் தேவையுள்ள இடத்திற்கு மாற்ற, மாற்று இடம் தேர்வு செய்ய பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில் முதலாவது பணியான மாநகராட்சி ரோடு – மங்கலம் ரோடு சந்திப்பு பணி தேசிய நெடுஞ்சாலை துறையினர் இந்த இடம் பற்றாக்குறை காரணமாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் சாத்தியமானதல்ல என்று கூட்டு ஆய்வின்போது தெரிவித்து உள்ளதால், இப்பணியை பார்க் ரோடு மற்றும் நேரு தெரு ஜங்சன் ஆகிய இடங்களில் நிறுவ உரிய அனுமதி கோரி கருத்துரு அரசுக்கு உரிய வழிமுறையில் அனுப்பலாம். மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ.1 / 447 / 2018 )

– – – – –

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

**267)** திருப்பூர் மாநகராட்சியில் 2018–19 ஆம் ஆண்டிற்கு இம்மாநகராட்சி அலுவலகம் மற்றும் மாமன்றம் அலுவலகம், P.R.O. அலுவலகம், அதிகாரிகளின் குடியிருப்புகள் தினசரி செய்திதாள்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.80,000/– (ரூபாய் எண்பதாயிரம் மட்டும் ) உத்தே தச செலவினம் ஆகும். மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

(அ) அனுமதி வழங்கலாம்.

(ஆ) 2018–19 ஆம் ஆண்டுக்கு வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் தினசரி செய்தித்தாள்கள் வாங்குவதற்கு ரூ.80,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அ.1 / 1741 / 2018)

– – – – –

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

**268)** திருப்பூர் மாநகராட்சியில் 14வது மத்திய நிதிக்குழு பரிந்துரை நிதி ( CFCG) 2017–18–ன் கீழ் ரூ.1700.00 இலட்சம் மதிப்பீட்டில் 40 பணிகள் மேற்கொள்ள மாமன்றத் தீர்மானம் எண்.156, நாள் 31.10.2017 வாயிலாக நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்படி 40 பணிகளுக்கும் 06.12.2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில், வார்டு எண்.19, கருப்பராயன் கோவில் வீதியில் (Main Disposal Drain) பிரதான மழைநீர் வடிகால் கட்டுதல் ( மதிப்பீட்டுத் தொகை ரூ.90,00,000/–) பணிக்கு அன்றைய தேதியில் ஒப்பந்தப்புள்ளகள் ஏதும் பெறப்படவில்லை. மேற்படி பணிக்கு இரண்டாம் அழைப்பில் 23.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

**268–ன் தொடர்ச்சி**

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1) | திரு R. சிவக்குமார் | 81,00,097/– | மதிப்பீட்டு விலையை விட 5.51% அதிகம். | இணைக்கப்பட்டுள்ளது |
| 2) | M/s. ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 82,56,030/– | மதிப்பீட்டு விலையை விட 7.54% அதிகம். | இணைக்கப்பட்டுள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு R.சிவக்குமார் என்பவரிடம் இவ்வலுவலக கடிதம் எண். 124/N/2017–18, நாள் 24.04.2018–ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 27.04.2018–ம் தேதிய கடிதத்தில், இனம் எண்.2ல் ரூ.3440/–க்கு பதிலாக ரூ.3325/–க்கும், இனம் எண்.5–ல் ரூ.5540/–க்கு பதிலாக ரூ.5450/–க்கும் மற்றும் இனம் எண்.8ல் ரூ.6145/–க்கு பதிலாக ரூ.6000/–க்கும் விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1) | திரு R. சிவக்குமார் (விலைக்குறைப்புக்கு பின்) | 80,56,942/– | மதிப்பீட்டு விலையை விட 4.94% அதிகம். |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.94% அதிகமாக இருந்த மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளலாம் என உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி முடிவெடுக்கும் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில்நகரமாக உள்ளதால், திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலை விகிதத்தைவிட கூடுதலாகவும், மற்ற நகரங்களைக் காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.94% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

(ம.எண். 124 / N / 2017–18)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

——————

**269)** இம்மாநகராட்சியின் மண்டலம் எண்.3–க்குட்பட்டநொய்யல் வீதி கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2018–19ஆம் ஆண்டிற்கு ( 07.03.2018, 20.03.2018, 26.03.2018, 05.04.2018, 25.04.2018, 09.05.2018 ) பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. மேலும் 09.05.2018 அன்று 6வது முறை நடைபெற்ற குறுகிய கால மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திருமதி எஸ்.பாலாமணி, திருப்பூர் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ. 83,700/–க்கு கோரியுள்ளார்.

**269–ன் தொடர்ச்சி**

மேற்படி குத்தகை தொகை ரூ.83,700 ஆனது கடந்தாண்டு குத்தகை தொகை ரூ.82,688/–யை காட்டிலும் ரூ. 1012/– அதிகமாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ.78,813/–யை விட ரூ. 4,887/–அதிகமாக உள்ளது. எனவே மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியாக கோரியுள்ள தொகை கூடுதலாக இருப்பதால், இவ்வினத்தை ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2019 வரை அனுபவித்துக் கொள்ள திருமதி எஸ்.பாலாமணி,, திருப்பூர் என்பவருக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

திருமதி எஸ்.பாலாமணி, திருப்பூர் என்பவரால் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ. 1012 /– கடந்தாண்டு குத்தகை தொகைக்கும், மூன்றாண்டு சராசரித் தொகைக்கும் கூடுதலாக இருப்பதால் ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2019 வரையும் மற்றும் மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் புதுப்பித்துக் கொண்டு மேற்படி இனத்தை அனுபவித்துக் கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( அ.1 / 843 / 2018)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

–––––

**270)** திருப்பூர் மாநகராட்சியில் கே.வி.ஆர்.நகர் நல மையத்தில் நகர சுகாதார செவிலியராகப் பணிபுரிந்து வரும் திருமதி பி.பியூலா ஜெயந்தி என்பவர் தனது வயதான மாமியாரும், 9 மாத கைக்குழந்தையும் உள்ளதாகவும், தனது கணவர் சென்னையில் பணிபுரிந்து வருவதாகவும், தனது குடும்பத்தை பராமரிக்க இயலவில்லை என தெரிவித்துள்ளார். எனவே 9 மாத கைக்குழந்தையின் பாதுகாப்பின்மையும், வயதான மாமியாரது நலத்தினை கருத்தில் கொண்டு உடுமலை நகராட்சிக்கு மாறுதல் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே திருமதி பி.பியூலா ஜெயந்தி நகர சுகாதா செவிலியரை உடுமலை நகராட்சியில் நகர சுகாதார செவிலியர் பணியிடத்திற்கு ஒரு வழி மாறுதல் செய்ய மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம். ( சி.1 / 1312 / 2017 )

–––––

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

–––––

(ஒம்) மா.அசோகன்
தனி அலுவலர்
திருப்பூர் மாநகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.

## திருப்பூர் மாநகராட்சி

**2018ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு மா. அசோகன் எம்.எஸ்.சி.,**

**தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,**

**திருப்பூர் மாநகராட்சி.**

*****

**271)** திருப்பூர் மாநகராட்சியில் தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் ( NULM) 2017–18ன் கீழ் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்தில், சிகிச்சை பெற வரும் நோயாளிகளின் உதவியாளர்களுக்கு தங்கும் அறை கட்டுதல் பணிக்கான மதிப்பீடு ரூ.96,50,000/–க்கு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணியின் மதிப்பீட்டிற்கு மாமன்ற தீர்மானம் எண்.108, நாள் 30.06.2017 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு 06.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1) | திரு S. செல்வராஜ் | 83,80,480/– | மதிப்பீட்டு விலையை விட 6.00% அதிகம். | இணைக்கப்பட்டுள்ளது |
| 2) | M/s. ஸ்ரீசாயி அசோசியேட்ஸ் | 85,02,098/– | மதிப்பீட்டு விலையை விட 7.54% அதிகம். | இணைக்கப்பட்டுள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், மேற்படி 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு S. செல்வராஜ் என்பவரிடம் இவ்வலுவலக கடிதம் எண். 233/S/2017–18, நாள் 09.04.2018–ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 16.04.2018ம் தேதிய கடிதத்தில், 10 இனங்களில் விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1) | திரு S. செல்வராஜ் (விலைக்குறைப்புக்கு பின்) | 82,94,115/– | மதிப்பீட்டு விலையை விட 4.90% அதிகம். |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையயை விட 4.90% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப் பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து, முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால், திருப்பூர் மாநகரில் கட்டிட கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலை விகிதத்தைவிட கூடுதலாகவும், மற்ற நகரங்களை காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.90% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

**271–ன் தொடர்ச்சி**

2) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் பணி உத்திரவு வழங்கியதை ஏற்கலாம். ( ம.எண். 233 / S / 2017–18 )

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

–––––

**272)** வார்டு எண்.52, பலவஞ்சிபாளையம் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தில் UPVC கதவுகள் மற்றும் ஜன்னல்கள் பொருத்துதல், கூடுதல் LED விளக்குகள் பொருத்துதல் மற்றும் வர்ணம் பூசுதல் பணிக்கான மதிப்பீடு ரூ.7,50,000/–க்கு தயார் செய்யப்பட்டது. திருப்பூர் மாநகராட்சிகள் சட்டம் 2008 திருத்தப்பட்ட பிரிவு 101 உட்பிரிவு 2(b)ன்படி ஆணையர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி மேற்படி பணிக்கு 15.12.2017 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 10.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1) | திரு S. செல்வராஜ் | 6,70,095/– | மதிப்பீட்டு விலையை விட 5.82% அதிகம். | இணைக்கப்பட்டுள்ளது |
| 2) | M/s. ஸ்ரீசாயி அசோசியேட்ஸ் | 6,87,160/– | மதிப்பீட்டு விலையை விட 8.51% அதிகம். | இணைக்கப்பட்டுள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், மேற்படி 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு S. செல்வராஜ் என்பவரிடம் இவ்வலுவலக கடிதம் எண். 246/S/2017–18, நாள் 13.04.2018–ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 20.04.2018ம் தேதிய கடிதத்தில் இனம் எண்.15ல் ரூ.9035/–க்கு பதிலாக ரூ.8600/–க்கு விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1) | திரு S. செல்வராஜ் (விலைக்குறைப்புக்கு பின்) | 6,64,701/– | மதிப்பீட்டு விலையை விட 4.97% அதிகம். |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டுவிலையையை விட 4.97%அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) பணியின் அவசர அவசியம் கருதியும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால், திருப்பூர் மாநகரில் கட்டிட கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலை விகிதத்தைவிட கூடுதலாகவும், மற்ற நகரங்களை காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.97% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

2) மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதலுடன் பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கலாம். ( ம.எண். 246 / S / 2017–18 )

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

–––––

**273)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.4, வார்டு எண்.58க்குட்பட்ட கார்த்திக் நகர் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடம் உள்ளது. அந்த இடத்தில் அம்ரூத் திட்டத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. இவ்விடத்தில் ஏற்கனவே பயன்பாட்டில் இல்லாத 35000 கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி உள்ளது. இது புதியதாக கட்டப்படும் 10.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டுமானத்திற்கு இடையூறாக உள்ளது. ஆகவே 35,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலைத் தொட்டியினை இடித்து அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

– – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

**–––––**

**274)** திருப்பூர் கூட்டுக்குடிநீர் திட்டத்திலிருந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பெறப்படும் குடிநீருக்கு, குடிநீர் கட்டணமாக கிலோ லிட்டருக்கு ரூ.4.50 வீதம் தற்போது செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், சேப்பாக்கம் சென்னை அவர்களின் கடிதம் எண். F.31810/Tariff / Revision / AE II / O& M / 2017 Dated 24-04-2018-ல் குடிநீர் தீர்வை கட்டணத்தை ஆண்டுக்கு 5 சதவீதம் உயர்த்துவதற்கு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளதாக தெரிவித்து பின்வரும் ஐந்தாண்டுகளுக்கு தற்போது உள்ள குடிநீர் தீர்வையை பின்வருமாறு செலுத்தக் கோரப்பட்டுள்ளது.

| | வருடம் | தொகை 1000 லிட்டருக்கு |
|---|---|---|
| நகர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் | **01.12.2017** முதல் **31.03.2018** வரை | ரூ.**9.00** |
| | **01.04.2018** முதல் **31.03.2019** வரை | ரூ.**9.45** |
| | **01.04.2019** முதல் **31.03.2020** வரை | ரூ.**9.92** |
| | **01.04.2020** முதல் **31.03.2021** வரை | ரூ.**10.42** |
| | **01.04.2021** முதல் **31.03.2022** வரை | ரூ.**10.94** |

எனவே உயர்த்தப்பட்ட தீர்வை கட்டணத்தில் குடிநீர் கட்டணம் செலுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** உயர்த்தப்பட்ட குடிநீர் கட்டண விகிதத்தில் கட்டணம் செலுத்தலாம்.

( இ.1 / 2722 / 2017 )

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**–––––**

**275)** திருப்பூர் மநகராட்சி எல்லைக்குள் குடிநீர் பற்றாக்குறையுள்ள இடங்களுக்கும், சத்துணவு மையங்களுக்கும், குடிசை பகுதிகளிலும் அவ்வப்போது குடிநீர் தேவைப்படும் இடங்களுக்கும் வாடகை லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. குடிநீர் விநியோகம் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டு பணி உத்திரவு **01.12.2017**ல் வழங்கப்பட்டு குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. அவ்வாறு **01–03–2018** முதல் **31–03–2018** வரை மாநகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய ஏற்படும் உத்தேச செலவினம்

**275–ன் தொடர்ச்சி**

ரூ.16.00 இலட்சத்திற்கு மாமன்றத் தீர்மான எண். 208, நாள் 23.02.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் செலவினம் ரூ.16,21,620/– ஏற்பட்டுள்ளது. ஆகவே கூடுதல் செலவினமாக ரூ.21,620/– ஏற்பட்டமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ.1 / 6112 / 2017 )

– – – ––

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

**––––––**

**276)** திருப்பூர் மநகராட்சி எல்லைக்குள் குடிநீர் பற்றாக்குறையுள்ள இடங்களுக்கும், சத்துணவு மையங்களுக்கும், குடிசை பகுதிகளிலும் அவ்வப்போது குடிநீர் தேவைப்படும் இடங்களுக்கும் வாடகை லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மாநகரில் அம்ரூத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் முடிவடையும் வரையில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் தேவைப்படுவதால் 01–12–2017ம் தேதி முதல் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகை லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய 22–11–2017ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலை ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு எம். அப்புசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு பணி உத்திரவு 30–11–2017ம் தேதி வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. எனவே 01–06–2018 முதல் 30–06–2018 வரை மாநகரில் குடிநீர் விநியோகம் லாரிகள் மூலம் செய்ய ஒரு மாத காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.16.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ.1 / 6112 / 2017 )

– – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

**––––––**

**277)** திருப்பூர் மாநகராட்சியில் 2014–15ம் ஆண்டு வரை மேற்கொண்ட பணிகளின் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட 1% மற்றும் 5% தொகைகளை திரும்ப வழங்கக் கோரி கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் விண்ணப்பித்துள்ளார்கள்.

மேற்படி ஒப்பந்ததாரர்கள் பணி செய்து முடித்து 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டது. எனவே, கீழ்க்கண்ட வைப்புத் தொகைகளை திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல். வரைவு ஒப்புதலுக்காக.

திருவாளர்கள்

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. | வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | T. திருமலைசாமி | 47000/– | 13. | A.R.S. & Co., | 22800/– |
| 2. | C.திருமலைசாமி | 37000/– | 14. | Swift Engineering | 44000/– |
| 3. | C. ராமசாமி | 31000/– | 15. | V.மணி | 6000/– |
| 4. | A. செந்தில்குமார் | 14000/– | 16. | P. செல்வி | 42000/– |
| 5. | G. கனகராஜ் | 125000/– | 17. | R. கிருஷ்ணன் | 285000/– |
| 6. | R.சிவக்குமார் | 280000/– | 18. | அப்பாச்சியப்பன் | 50000/– |

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. | வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 7. | R.முத்துச்சாமி | 140000/– | 19. | C. தேவராஜ் | 120000/– |
| 8. | ரஹமத்துல்லா | 130000/– | 20. | S.M.B. & Co., | 440000/– |
| 9. | ஸ்ரீசிவராம் அன் கோ., | 146000/– | 21. | நித்தியானந்தன் | 55000/– |
| 10. | ஆறுச்சாமி | 51000/– | 22. | R. பெத்தனன் | 50000/– |
| 11. | K. கணேசன் | 110000/– | 23. | A.R.S.& Co., | 31800/– |
| 12. | T.கோபாலகிருஷ்ணன் | 5300/– | | | |

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

– – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

**––––––**

**278)** மண்டலம் 2ல் வார்டு எண்.21–க்குட்பட்ட டி.எஸ்.பி.நகர் பகுதியில் அமைந்துள்ள 6000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலைத் தொட்டி மண்ணரை ஊராட்சி இருந்தபோது 1999–2000ம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட மேல்நிலைத் தொட்டி பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. மேலும் இதன் அருகில் குடியிருப்புகள் மற்றும் கோவில் அமைந்து உள்ளதால் அருகில் வசிக்கும் பொது மக்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. எனவே பழுதடைந்த மேல்நிலைத் தொட்டியை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

– – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

**––––––**

**279)** மண்டலம் 2ல் வார்டு எண்.24–க்குட்பட்ட லட்சுமி நகர் 50அடி சாலையில் அமைந்துள்ள 10000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலைத் தொட்டி பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுள்ளது. தற்போது இந்த மேல்நிலைத் தொட்டி பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. மேல்நிலைத் தொட்டி அமைந்துள்ள சாலையின் வழியாக வாகனங்களில் செல்வோருக்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. எனவே பழுதடைந்த மேல்நிலைத் தொட்டியை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

– – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

**––––––**

**280)** 1999ஆம் வருடத்திய தமிழ்நாடு தொழில்வரி சட்ட விதிகளில் விதி எண்.16–ன்படி ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தொழில்வரி கட்டண விகிதங்களை மாமன்றம் கூடுதலாக வரி விதித்து தொழில்வரி வசூல் செய்திட வேண்டும் எனவும், அவ்வாறு மாமன்றத்தால் கூடுதலாக விதிக்கப்படும் தொழில்வரி விகிதம் முன்பு இருந்த தொழில்வரி கட்டண விகிதங்களை விட கூடுதலாக 25சதவீதத்திற்கும் குறையாமலும், 35சதவீதித்திற்கு மிகாமலும் இருக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விதி எண்.16ன்படி 01.10.1998 முதல் ஐந்தாண்டு இடைவெளியில் 2003 மற்றும் 2008 ஆகிய வருடங்களில் தொழில்வரி திருத்தி விதிக்கப்பட்டது.

**280–ன் தொடர்ச்சி**

தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.ந.க.12503/2018/ஆர்.1, நாள் 21.05.2018–ன்படி 01.10.2018 முதல் தொழில்வரி 25%க்கு குறையாமலும் 35% மிகாமலும் உயர்வு செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி 01.10.2018 முதல் தொழில்வரி கீழ்க்கண்ட விபரப்படி 30% உயர்வு செய்தும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | சராசரி அரையாண்டு வருமானம் | தற்போது வசூலிக்கப்படும் அரையாண்டு தொழில்வரி | 01.10.2018 முதல் 30% உயர்வு செய்யப்பட்ட தொழில்வரி |
|---|---|---|---|
| 1. | 0 முதல் 21000 வரை | இல்லை | – |
| 2. | 21001 முதல் 30000 வரை | 120 | 156 |
| 3. | 30001 முதல் 45000 வரை | 300 | 390 |
| 4. | 45001 முதல் 60000 வரை | 590 | 767 |
| 5. | 60001 முதல் 75000 வரை | 890 | 1157 |
| 6. | 75001 முதல் அதற்கு மேல் | 1175 | 1528 |

**அலுவலகக் குறிப்பு :**

1999–ம் வருடத்திய தமிழ்நாடு தொழில்வரி சட்ட விதி எண்.16 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.ந.க.12503 /2018/ஆர்.1, நாள் 21.05.2018ன்படி 01.10.2018முதல் 30%கூடுதலாக தொழில்வரி உயர்வு செய்யப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**281)** திருப்பூர் மாநகராட்சி வார்டு எண்.49, வெடத்தலாங்காடு தெற்குத் தோட்டம் பகுதியில் உள்ள மயானப் பகுதியில் எரிவாயு தகனமேடை அமைத்து தனியார் வசம் ஒப்படைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு வரும் நிலையில் உள்ளது. மேலும் அந்த மயானப் பகுதியில் அபிவிருத்தி பணிகள் மேற்கொண்டு பொது மக்கள் அதிகம் பயன்படுத்த வேண்டியுள்ளதால் மயானப் பகுதியில் உள்ள பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள பொதுக் கழிப்பிடத்தை இடித்து அகற்றிவிட்டு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். (ம.எண். 24 / S – 2018-19)

– ––– –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**282)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவு மூலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரம் பேணவும் டெங்கு காய்ச்சல் போன்ற நோய்கள் தடுப்பு பணிகளுக்காகவும் தெருக்கள் கழிவுநீர் வாய்க்கால்கள், பொது கழிப்பிடங்கள், மாநகராட்சி பள்ளிகள், பேருந்து நிலையங்கள், போன்ற இடங்களில் தெளிப்பதற்காக பிளீச்சிங் பவுடர் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**282–ன் தொடர்ச்சி**

இப் பணிகளுக்கு ஒரு வருடத்துக்கு உத்தேசமாக 90.00 மெட்ரிக்டன் பிளிச்சீங் பவுடர் தேவைப்படுகிறது. எனவே ஒரு வருட காலத்துக்கு தேவையான மேற்காண் பிளிச்சீங் பவுடர் கொள்முதல் செய்வதற்கும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.21.00 இலட்சத்துக்கும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

– – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

–––––

**283)** திருப்பூர் மாநகராட்சியில் 2012–2013ம் ஆண்டு இயக்கமும் மற்றும் பராமரிப்பும் இடைவெளி நிரப்பும் திட்டத்தின் கீழ் பெற்ற மான்யம் மற்றும் மாநகராட்சி நிதியிலிருந்து வார்டு எண்.49ல் வெடத்தலாங்காடு தெற்கு தோட்டம் ஏபிடி சாலையில் ஏற்கனவே உள்ள மயானப் பகுதியில் எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவர தயார்நிலையில் உள்ளது.

மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து தடையின்மைச் சான்று பெறப்பட்டுள்ளது. எனவே இதனை பராமரிப்பு செய்து சடலங்கள் தகனம் செய்யும் பணியினை செய்வதற்கு திருப்பூர் வடக்கு ரோட்டரி மயான அறக்கட்டளை நிறுவனம் முன் வந்துள்ளது. எனவே மேற்படி நிறுவனம் மற்றும் மாநகராட்சி ஏற்படுத்திக் கொள்ளும் முடிவுகளுக்கு கட்டுப்பட்டு செயல்படுத்தவும் இதற்காக பின்வரும் தலைவர் மற்றும் உறுப்பினர்களை கொண்டு அமைக்கப்படும் நிர்வாகக் குழு நிர்ணயிக்கும் கட்டண விகிதப்படி தகனக் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்ற ஒப்பந்தப்படி நிர்வகிக்க மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**நிர்வாக குழு விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாநகராட்சி எரிவாயு மயான குழு தலைவர் | : | மாநகராட்சி மேயர்<br>(தேர்தல் நடைபெறும் வரை)தனி அலுவலர் |
| 2. | மாநகராட்சி எரிவாயு மயான குழு துணைத்தலைவர் | : | துணை மேயர்<br>(தேர்தல் நடைபெறும் வரை காலியிடம்) |
| 3. | மாநகராட்சி எரிவாயு மயான குழு செயலாளர் | : | ஆணையாளர் |
| 4. | மாநகராட்சி எரிவாயு மயான குழு உறுப்பினர் | : | மாநகராட்சி பொறியாளர் |
| 5. | மாநகராட்சி எரிவாயு மயான குழு உறுப்பினர் | : | மாநகர சுகாதார அலுவலர் |
| 6. | மாநகராட்சி எரிவாயு மயான குழு உறுப்பினர் | : | செயற்பொறியாளர் |
| 7. | மாநகராட்சி எரிவாயு மயான குழு உறுப்பினர் | : | வடக்கு ரோட்டரி நிறுவனத்தின் தலைவர் மற்றும் செயலாளர். |

**அலுவலகக் குறிப்பு :**மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம். ( ம.எண். 164 / S / 2012 –13)

– – – – –

**தீர்மானம் : ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

–––––

**(ஒம்) மா.அசோகன்**
**தனி அலுவலர்**
**திருப்பூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையருக்காக,**
**திருப்பூர் மாநகராட்சி.**